21.08.2025

OS No: 119/2023

வா.சா. 1 திரு. ரேவதி க/பெ. சரவணன்.

<u>1, 2 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

தாவா சொத்தில் கீழ் பகுதியில் நாங்கள் பாத்திர கடை வைத்துள்ளோம் என்றால் சரிதான். எத்தனை வருடங்களாக அங்கு நாங்கள் கடை வைத்துள்ளோம் என்றால் 2013ம் வருடத்தில் இருந்து கடை வைத்துள்ளோம். நாங்கள் கடை வைத்துள்ள இடத்திற்கு மேலே உள்ள தாவா சொத்தில் பிரதிவாதிகள் எத்தனை வருடங்களாக கடை வைத்துள்ளார்கள் என்றால் உத்தேசமாக 2015 வருடத்தில் இருந்து வைத்துள்ளார்கள். என்ன பரிகாரம் கோரி வழக்கு போட்டுள்ளேன் என்றால் வாடகை பணம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன். வாடகை கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் வாடகை தொகை கோரி வேறு வழக்கு எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளுடன் வாடகை குறித்து ஒப்பந்தம் எதுவும் எழுதி கொண்டேனா என்றால் இல்லை வாய்மொழியாக தான் பேசிக்கொண்டோம். 2015 ம் காலத்தில் இருந்து தற்போது வரை பிரதிவாதிகளிடம் வாடகை பெற்றதற்கான ரசீது ஏதேனும் ஏற்படுத்தி கொண்டேனா என்றால் இல்லை. கடையை காலி செய்வது குறித்து எனக்கும் பிரதிவாதிகளுக்கும் பிரச்சனை ஏதேனும் நடந்ததா என் கணவர் மீது காவல் நிலையத்தில் பிரதிவாதிகள் புகார் கொடுத்து விசாரணை செய்யப்பட்டதா என்றால் இல்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படுவது காவல் நிலையத்தில் பதிவு செய்யப்படும் FIR என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிகளை கடையை காலி செய்ய சொல்லி எனது கணவரும் மேலும் 3 நபர்களும் பிரதிவாதிகளுடன் பிரச்சனை செய்ததற்காக காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நபர்களை தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவர் மீது போடப்பட்ட வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் தெரியாது. இதே வழக்கு சொத்து சம்மந்தமாக சிவகங்கை மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

மேற்படி வழக்கில் பதில் உரை நான் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேற்படி வழக்கில் நான் கொடுத்த பதில் உரை என்றால் சரிதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றால் சரிதான். பதிலுரை பி.வா.சா.ஆ.1. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 41 மாத வாடகை பாக்கி ரூ.82,000/- சமூகம் கோர்ட்டில் செலுத்த வேண்டியுள்ளது என சங்கதி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். பிரதிவாதிகளிடம் முன் தொகையாக ரூ.10 லட்சம் நான் பெற்றுள்ளேன் என்றும் அதை பிரதிவாதிகளிடம் திருப்பி கொடுக்க கூடாது என்பதற்காக தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என்னிடம் கொடுத்த அட்வான்ஸ் தொகையில் அவர்கள் கொடுக்க வேண்டியதாக சொல்லும் வாடகை தொகையை கழித்து கொண்டு மீதம் உள்ள அட்வாண்ஸ் தொகையை பிரிதிவாதிகளிடம் கொடுத்திட நான் தயாராக உள்ளேனா என்றால் ரூ.10 லட்சம் எதுவும் பிரதிவாதிகள் அட்வான்ஸ் தொகையாக என்னிடம் கொடுத்ததாக சொல்வது பொய். எனது கணவர் மீதும் மற்றவர்கள் மீதும் பிரதிவாதிகள் குற்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் அதில் இருந்து தப்பிக்க வேண்டி தாவா வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் பிரதிவாதிகள் வாடகை தொகை செலுத்த வேண்டியிருந்தால் வாடகை கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் தான் நான் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்றும் தாவா வழக்கு பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு இந்நீதிமன்றதில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சிவகங்கை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பிரதிவாதிகளிடம் வாடகை தொகை கேட்டு பதில் உரை தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதே பரிகாரத்திற்காக இந்நீதிமன்றத்திலும் வழக்கு போட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்ட காரணத்தினால் தாவா வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.08.21 17:35:17 +0530